## ஹஜ்ரத் முஹம்மத் (ﷺ)

*சீரத்துன் நபி எனும் நபி சரிதையைப் படித்துப் பார்ப்பதினால் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய தனிப்பெரும் சிறப்புக்களைப்பற்றிய பல்வேறு அம்சங்க ளைக் கண்டறியும் வாய்ப்புக்கிடைக்கின்றது, உதாரணமாக, அவர்களுடைய ﷺ சமூக, அரசியல் சார்ந்த மற்றும் பொருளாதார ரீதியான அம்சங்கள், அவர் களுடைய ﷺ அழைப்புப் பணிகளின் அணுகுமுறை, போர் மற்றும் அமை திக்கான காலக்கட்டங்களில் அவர்கள் கையாண்ட செயல்முறை அகியன.*

*சீரத்துன் நபியின் மூலம் முஸ்லிம்களுக்கு வெற்றி மற்றும் தோல்விக்கான காரணங்களைப்பற்றி அறிய முடிகிறது மற்றும் முஸ்லிம்களிடையே தன்னம் பிக்கை மேம்படுகின்றது, அத்துடன் அவர்களுக்கு அல்லாஹ் நம்முடன் இருக் கின்றான் என்ற உறுதியான நம்பிக்கையுடன், அவர்கள் மனத்தூய்மையுடனும் அல்லாஹ்வுக்காக மட்டுமே வணக்க வழிபாடுகளை மேற்கொண்டு அவனு டைய ஷரீஅத் முறையிலான மாச்க்கச்சட்டங்களைப்பின்பற்றி நடப்பார் களேயானால் அல்லாஹ்தான் அவர்களைப் பாதுகாப்பவனும் அவர்களுக்கு உதவி செய்பவனுமாயிருக்கின்றான் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுவிடுகின் றது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِن تَنصُرُواْ ٱللَّهَ يَنصُرۡكُمۡ وَيُثَبِّتۡ أَقۡدَامَكُمۡ ۝٧

*பொருள்: இறைநம்பிக்கை கொண்டவர்களே, நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி புரிந்தால் அவன் உங்களுக்கு உதவி வழங்குவான், மேலும், உங்களின் பாதங்களை உறுதிப்படுத்துவான் (முஹம்மத்:7)*

إِنَّا لَنَنصُرُ رُسُلَنَا وَٱلَّذِينَ ءَامَنُواْ فِي ٱلۡحَيَوٰةِ ٱلدُّنۡيَا وَيَوۡمَ يَقُومُ ٱلۡأَشۡهَٰدُ ۝٥١

*பொருள்: உறுதியாகத் தெரிந்தகொள்ளுங்கள், நாம் நம்முடைய தூதர்களுக் கும் நம்பிக்கை கொண்டர்களுக்கும் இவ்வுலக வாழ்விலும் அவசியம் உதவி செய்வோம், சாட்சிகள் நிற்கும் (மறுமை) நாளிலும் உதவிசெய்வோம் (ங்காஃபிர்:51)*

وَلَيَنصُرَنَّ ٱللَّهُ مَن يَنصُرُهُۥٓۚ إِنَّ ٱللَّهَ لَقَوِيٌّ عَزِيزٌ ۝٤٠

*பொருள்: நிச்சயமாக, தனக்கு உதவி செய்வோருக்கு அல்லாஹ் உதவி செய் வான், நிச்சயம், அல்லாஹ் வலிமை வாய்ந்தவனும் யாவற்றையும் மிகைத்த வனுமாய் இருக்கின்றான் (அல் ஹஜ்:40)*

## இறைத்தூதர் ﷺ அவர்களுடைய மரபு வம்சாவழி

அவர்களுடைய ﷺ வம்சாவழியின் தொடர் முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிப் பின் ஹிஷாம் பின் அப்து மனாஃப் பின் ஃகுஸி பின் கிலாப் பின் முர்ரஹ் பின் கஅப் பின் லுயி பின் ங்காலிப் பின் ஃபஹ்ர் பின் மாலிக் பின் அந்நஸ்ஜ்ர் பின் கனானஹ் பின் க்ஹுஜ்ஸய்மஹ் பின் முத்ரிக பின் இல்யாஸ் பின் முஜ்தர் பின் நஜ்ஸார் பின் மஃஅத் பின் ஃஅத்னான் வரை சென்றடைகின்றது. இது அனைவருடைய ஒத்தக் கருத்தின் அடிப்படை யிலான அவர்களுடைய ﷺ மரபுவழியின் படிவமாகும். வரலாற்று ஆசிரியர் கள் ஃஅத்னான் அவர்கள் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அ) அவர்களுடைய வழிவந்த வர்களான மக்களில் ஒருவராவார் என்ற ஒத்தக் கருத்தினனைக் கொண்டிருக் கின்றனர்.

## இறைத்தூதர் ﷺ அவர்களுடைய பெயர்கள்

ஹஜ்ரத் ஜுபைர் பின் முத்ஃஇம் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ لِيْ أَسْمَاءَ، أَنَا مُحَمَّدٌ، وَأَنَا أَحْمَدُ، وَأَنَا الْمَاحِي الَّذِيْ يَمْحُو اللهُ بِيْ الْكُفْرَ، وَأَنَا الْحَاشِرُ الَّذِيْ يُحْشَرُ النَّاسُ عَلَى قَدَمَيَّ، وَأَنَا الْعَاقِبُ الَّذِيْ لَيْسَ بَعْدَهُ أَحَدٌ (متفق عليه)

பொருள்: நான் முஹம்மத், நான் அஹ்மது, நான் மாஹி ஆகவும் உள்ளேன், அதாவது என்னைக்கொண்டு அல்லாஹ் இறைமறுப்பினையே அழித்து விடுவான், நான் ஹாஷிர், அனைத்து மனிதர்களும் என்னுடைய காலடியில் ஒன்றுசேர்க்கபப்படுவார்கள் மற்றும் ந ான் ஃஆஃகிப், எனக்குப் பிறகு எந்த நபியும் வரமாட்டார் (புக்ஹாரி,முஸ்லிம்).

ஹஜ்ரத் அபூ மூசா அஷ்ஃஅரி (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத் தூதர் ﷺ அவர்கள் எங்களுக்குத் தம்முடைய பல பெயர்களைப்பற்றி கூறியுள்ளார் கள். அவர்கள் ﷺ கூறினார்கள்:

أَنَا مُحَمَّدٌ، وَأَحْمَدُ، والْمُقَفَّى، وَالْحَاشِرُ، وَنَبِيُّ التَّوْبَةِ، وَنَبِيُّ الرَّحْمَةِ (مسلم)

பொருள்: நான் முஹம்மத், நான் அஹ்மது, நான் அஃகஃப்பா மற்றும் நான் ஹாஷிர், நபிய்யுத் தவ்பஹ் மற்றும் நபிய்யுர் ரஹ்மஹ் ஆகவும் உள்ளேன் (முஸ்லிம்).

## இறைத்தூதர் ﷺ அவர்களுடைய உயர்வான வம்சாவழி

*ஹஜ்ரத் வாத்ஸிலஹ் பின் அஸ்ஃகஅ (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:*

**إِنَّ اللهَ اصْطَفَى مِنْ وَلَدِ إِبْرَاهِيمَ إِسْمَاعِيْلَ، وَاصْطَفَى مِنْ وَلَدِ إِسْمَاعِيْلَ بَنِي كَنَانَةَ، وَاصْطَفَى مِنْ بَنِي كَنَانَةَ قُرَيْشاً، وَاصْطَفَى مِنْ بَنِي قُرَيْشٍ بَنِيْ هَاشِمٍ، وَاصْطَفَانِي مِنْ بَنِي هَاشِمٍ** (مسلم)

*பொருள்: அல்லாஹ் தஆலா இப்ராஹீம் (அ) அவர்களுடைய மக்களிலிருந்து இஸ்மாயீல் (அ) அவர்களைத் தேர்ந்தெடுத்தான், இஸ்மாயீல் (அ) அவர்களுடைய மக்களிலிருந்து பனூ கனானஹ்வைத் தேர்ந்தெடுத்தான், பனூ கனானஹ்விலிருந்து பனூ ஃகுரைஷைத் தேர்ந்தெடுத்தான், பனூ ஃகுரைஷிலிருந்து பனூ ஹாஷிமைத் தேர்ந்தெடுத்தான், பனூ ஹாஷிமிலிருந்து என்னைத் தேர்ந்தெடுத்தான். (முஸ்லிம்).*

*ஹெர்குலஸ் மன்னர் அபூ சுஃப்யான் (ர) அவர்களிடம் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய வம்சாவழியைப்பற்றிக் கேட்டபோது அபூ சுஃப்யான் (ர) அவர்கள் பதிலளித்தார்கள், அவர்கள் மிகவும் உயர்ந்த மரபுவழியில் வந்தவர்கள். அதற்கு ஹெர்குலஸ் மன்னர் கூறினார், நபிமார்கள் தங்களுடைய சமூகத்தின் உயர்வான மரபுவழியினராகவே அனுப்பப்படுவார்கள் (புக்ஹாரி).*

## இறைத்தூதர் ﷺ அவர்களுடைய பிறப்பு

*இறைத்தூதர் ﷺ அவர்கள் ரபீஃஉல் அவ்வல் மாதத்தில் திங்களன்று பிறந்தார்கள். அவர்களுடைய ﷺ பிறந்த நாளைப்பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. சில வரலாற்று ஆசிரியர்கள் ரபீஃஉல் அவ்வல் 2 ஆம் நாள் என்றும், சிலர் 8 ஆம் நாள் என்றும், சிலர் 10 ஆம் நாள் என்றும், சிலர் 12 ஆம் நாள் என்றும் கூறுகின்றனர். இப்னு கத்ஸீர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள், அவர்கள் ﷺ பிறந்தது ஃஆமுல் ஃபீல் எனப்படும் வருடத்தில், இதுவே பெரும்பாலான இஸ்லாமிய வரலாற்று அசிரியர்களான இப்னுல் முன்த்ஜிர், க்ஹலீஃபாா பின் க்ஹய்யாத் ஆகியோருடைய கருத்துமாகும்.*

*முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள், அவர்களுடைய ﷺ தாயார் கருவுற்றிருந்தபோது, அவர்கள் கூறினார்கள், எனக்கு வயிற்றில் குழந்தையின்*

*பளு உணரப்படுவதில்லை என்றும் அவர்களைப் ﷺ பெற்றெடுத்தபோது அவர்களுடன் ﷺ ஒரு பிரகாசமும் (நூர்) தோன்றியது, அதன் காரணமாகக் கிழக்கு மேற்கு திசைகளுக்கிடையே பிரகாசம் பரவியது.*

*ஹஜ்ரத் இர்பாஸ் பின் சாரியா (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கீழ்க் கண்டவாறு கூறியதைக் கேட்டதாக அறிவிக்கிறார்கள்:*

**إِنِّيْ عِنْدَ اللهِ فِي أُمِّ الْكِتَابِ لَخَاتَمُ النَّبِيِّيْنَ، وَإِنَّ آدَمَ لَمُنْجَدِلٌ فِيْ طِيْنَتِهِ، وَسَأُنَبِّئُكُمْ بِتَأْوِيْلِ ذَلِكَ، دَعْوَةُ أَبِيْ إِبْرَاهِيمَ وَبِشَارَةِ عِيْسَى قَوْمَهُ، وَرُؤْيَا أُمِّيْ الَّتِيْ رَأَتْ أَنَّهُ خَرَجَ مِنْهَا نُوْراً أَضَآءَتْ لَهُ قُصُوْرُ الشَّامِ، وَكَذَلِكَ تَرَى أُمَّهاتُ النَّبِيِّيْنَ صَلَوَاتُ اللهِ عَلَيْهِمْ** (مسند أحمد)

*பொருள்: நான் அல்லாஹ்விடத்தில் ஆதம் (அ) அவர்கள் களிமண்ணினால் வடிவமைக்கப்பட்டுக்கொண்டிருந்த அக்காலத்திலேயே அடியானாகவும், நபி மார்களின் இறுதி முத்திரையாகவும் உம்முல் கிதாபிலே இடம்பெற்றிருந் தேன், நான் உங்களுக்கு அதற்கான காரணத்தையும் கூறுகின்றேன், நான் என் னுடைய தந்தையான இப்ராஹீம் (அ) அவர்களுடைய வேண்டுதலாகவும் உள்ளேன், ஈசா (அ) அவர்கள் தன்னுடைய சமூகத்தினருக்கு அளித்த நற்செய்தி யாகவும் உள்ளேன், என்னுடைய தாயார் அவர்கள் கண்ட கனவாகவும் உள் ளேன், அவர்களுக்குள்ளிலிருந்து ஒரு பிரகாசம் வெளிப்பட்டு சீரியா நாடு முழுவதும் பரவிவிட்டதாக அவர்கள் கண்டார்கள், அவ்வாறே அனைத்து நபிமார்களின் தாயார்களும் (அ) காண்பார்கள் (முஸ்னது அஹ்மது)*

*அவர்கள் ﷺ தன்னுடைய தாயாரின் வயிற்றில் இருக்கும்போதே அவர்களு டைய தந்தை இறந்துவிட்டார்கள்.*

### இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பாலூட்டுதல், வளர்ப்பு

*அபூ லஹப் அவர்களுடைய பணிப்பெண் த்ஸுவைபஹ் அவர்களுக்கு ﷺ சில நாட்கள் பாலூட்டினார்கள், அதன் பின் ஹலீமா (ர) அவர்கள் அவர்களுக்குப் ﷺ பாலூட்டினார்கள். அவர்கள் ﷺ பனூ சஅத் சமூகத்தில் நான்கு வருடங்கள் தங்கியிருந்தார்கள். அங்கே இருந்தபோதுதான் அவர்களுடைய ﷺ மார்பு பிளக்கப்பட்டு ஜ்ஸம்ஜ்ஸம் தண்ணீரினால் சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின், வளர்ப்புத்தாய் ஹலீமா (ர) அவர்கள் அவர்களை அவர்களுடைய ﷺ தாயாரிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.*

அவர்கள் ﷺ ஆறு வயதை அடைந்தபோது அவர்களுடைய ﷺ தாயார் அப்வா எனும் இடத்தில் இறந்துவிட்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் மக்காஹ் செல்லும் வழியில் அப்வா எனும் இடத்தைச் சென்றடைந்தபோது அவர்களுடைய ﷺ தாயாரின் அடக்கஸ்தலத்திற்குச் சென்று துஆ செய்ய அல்லாஹ் விடம் அனுமதி கேட்டார்கள். அனுமதி கிடைத்தபின் அவ்விடத்திற்கு வருகை தந்து தங்களுடைய தாயின் ஃகபருக்கு அருகில் நின்று தாமும் அழுதார்கள் நபித்தோழர்கள் அனைவரும் அழும் வகையில் அங்கு தங்கியிருந்து அதன்பின் கூறினார்கள்:

زُوْرُوا الْقُبُوْرَ فَإِنَّهَا تُذَكِّرُكُمُ الآخِرَةَ (مسلم)

பொருள்: நீங்கள் ஃகபருகளுக்குச் சென்று பாருங்கள, ஏனெனில், அது உங்களுக்கு மறுமையை நினைவுபடுத்தும் (மஸ்லிம்).

தன்னுடைய தாயாரின் மரணத்திற்குப்பிறகு அவர்களுடைய ﷺ பாட்டனார் ஹஜ்ரத் அப்துல் முத்தலிப் அவர்களை ﷺ வளர்த்தார்கள். அவர்கள் ﷺ எட்டு வயதை அடைந்தபோது பாட்டனாரும் இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டார்கள். அதன்பின் அவர்களுடைய ﷺ சிறிய தந்தை அபூ தாலிப் அவர்கள் அவர்களை ﷺ வளர்த்தார்கள். அவர்களும் அவர்களுக்கு ﷺ மிக்க கவனம் செலுத்தி வந்தார்கள், நபித்துவம் கிடைத்த பின்பும் அவர்களை ﷺ முழுமையான ஆதரவு அளித்து எல்லா வகையிலும் அவர்களுக்கு ﷺ உதவியும் ஒத்துழைப்பும் அளித்தார்கள். இருப்பினும், அவருடைய மறைவு இறைமறுப்பு மற்றும் இறைத்தூதர் ﷺ அவர்களைப் பின்பற்றி நடக்காத நிலையிலேயே ஏற்பட்டது. ஆனால், அல்லாஹ் தஆலா அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு எல்லா வகையிலும் அளித்துவந்த ஆதரவின் காரணமாக அவருடைய வேதனையை லேசானதாக ஆக்கிவிட்டான் என்று ஸஹீஹான நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளது.

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ர) அவர்கள் கூறினார்கள், இறைத்தூதர் ﷺ அவர்களே, நீங்களும் அபூ தாலிப் அவர்களுக்கு ஏதும் நன்மை செய்துள்ளீர்களா? அவர்கள் உங்களுக்குப் பாதுகாப்பாக இருந்துவந்தார்கள், உங்களுக்கு உதவி செய்தும் உங்களுக்காக மக்கள்மீது கோபம் கொண்டும் நடந்துகொண்டுள்ளார்களே. அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள்:

نَعَمْ، هُوَ فِيْ ضَحْضَاحٍ مِنْ نَارٍ، لَوْلاَ أَنَا لَكَانَ فِءِ الدَّرْكَ الأَسْفَلِ مِنَ النَّأرِ (البخاري)

*பொருள்: ஆம், அவர்கள் நரகத்தில் மேற்பகுதியில் இருக்கின்றார்கள், நான் இல்லாதிருந்தால் (நான் அவர்களுக்காக துஆ செய்திராவிட்டால்) அவர்கள் நரகத்தின் மிகக் கடுமையான வேதனையுள்ள அதன் அடித்தளத்தில் இருந் திருப்பார்கள் (புக்ஹாரி).*

## அறியாமை காலத்துத் தீய செயல்களிலிருந்து அவர்களுடைய ﷺ பாதுகாப்பு

*அல்லாஹ் தஅலா அவர்களுக்குக் ﷺ குழந்தைப் பருவத்திலிருந்தே அறியாமை காலத்தில் பரவியிருந்த தீய செயல்கள் ஒவ்வொன்றிலிருந்தும் பாதுகாத்து அவர்களை ﷺ உயர்வான பண்புகளையுடையவராக ஆக்கினான், இதன் காரணமாகவே, மக்கள் அவர்களை* **ஸாதிஃக்** *மற்றும்* **அமீன்** *என்று கண்ணி யத்துடன் அழைத்து வந்தனர்.*

*அவர்கள் ﷺ முப்பத்தைந்து வயதுடையவர்களாக இருந்தபோது ஃகுரைஷி கள் கஅபதுல்லாஹ்வைப் புதுப்பித்துக் கட்டும் பணியைத் துவங்கினர். அவர் கள் ஹஜருல் அஸ்வதை அதற்கான இடத்தில் பொறுத்தும் நேரம் வந்தபோது ஹஜருல் அஸ்வதை யார் அதற்கான இடத்தில் வைப்பது என்று அவர்களுக் கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. அப்போது ஃகுரைஷியர்கள் கூறினர், நாங்கள்தான் ஹஜருல் அஸ்வதை அதற்கான இடத்தில் வைப்போம். அடுத்தப் பிரிவினர் கூறினார்கள், நாங்கள்தான் வைப்போம். அங்கே சிலர் கூறினார்கள், உங்களுக்கிடையே ஒரு நடுவரை ஆக்கிக்கொள்ளுங்கள். அப் போது அவர்கள் கூறினார்கள், இந்த இடத்திற்கு யார் முதலில் வருவார் களோ அவரையே நாம் நடுவராக ஆக்கிக்கொள்வோம். சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கே முதலில் நபி ﷺ அவர்கள் வந்தடைந்தார்கள். அப்போது மக்கள் கூறினார்கள், உங்களிடத்தில் அல் அமீன் வந்துள்ளார்கள், அதன்பின் அவர் கள் நபி ﷺ அவர்களிடம் இதனைப்பற்றி எடுத்துக்கூறினார்கள். நபி ﷺ அவர் கள் ஹஜருல் அஸ்வதை ஒரு துணியில் வைத்தார்கள், அதன்பின் ஃகுரைஷிக் குடும்பத்தினர்களை அழைத்தார்கள், அவர்கள் வந்து அந்தத் துணியின் நான்கு மூலைகளை ஒவ்வொருவரும் ஒரு புறம் பிடித்துத் தூக்கினார்கள், நபி ﷺ அவர்கள் அதற்கான இடத்தில் உயர்த்தப்பட்டபோது அதனைத் தூக்கி தங்க ளுடைய புனிதமான கரங்களினாலேயே அதனைப் பொறுத்திவிட்டார்கள் (முஸ்னது அஹ்மத்)*

### இறைத்தூதர் ﷺ அவர்களுடைய திருமணம்

இருபத்தைந்து வயதில் அவர்கள் ﷺ ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களுடன் திரு மணம் செய்துகொண்டார்கள். அப்போது ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களு டைய வயது நாற்பது ஆண்டுகளாக இருந்தது. அவர்கள் ﷺ ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களுடைய அடிமையான மய்சரஹ்வுடன் வியாபாரத்திற்குச் சென் றார்கள். மய்சரஹ் அவர்களுடைய ﷺ நற்பண்புகள், உண்மை மற்றும் அமா னிதப் பண்புகளினால் மிகவும் கவரப்பட்டு, வியாபாரப் பயணத்திலிருந்து திரும்பி வந்தபின்பு ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களிடம் அவர்களுடைய ﷺ அமானிதம் மற்றும் உண்மைபேசும் பண்பு ஆகியவற்றைப்பற்றி எடுத்துக்கூறி னார். இதனைக்கேட்ட ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்கள் அவர்களுடைய ﷺ நற்பண்புகளைக்கொண்டு ஈர்க்கப்பட்ட நிலையில் அவர்களுக்குத் திருமண விருப்பத்தின் செய்தியை அனுப்பினார்கள், இவ்வகையில் அவர்களுடன ﷺ திருமண உறவு ஏற்பட்டுவிட்டது.

ஹிஜ்ரத் மேற்கொள்ளப்படுவதற்கு மூன்று ஆண்டுகள் முன்பாகவே ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களுடைய மரணம் ஏற்பட்டது. அவர்கள் வாழ்ந்த காலத் தில் இறைத்தூதர் ﷺ அவர்கள் யாரையும் மணந்துகொள்ளவில்லை. அவருக் குப்பின்பு அவர்கள் ﷺ ஹஜ்ரத் சவ்தா பின்த் ஜ்ஸம்அஹ் (ர) அவர்களை மணந்துகொண்டார்கள். அதன்பின்  ஹஜ்ரத் ஆயிஷா பின்த் அபூபக்ர் (ர) அவர்களை மணந்துகொண்டார்கள். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்களைத்தவிர இறைத்தூதர் ﷺ அவர்களுடைய மனைவியர்களில் யாரும் கன்னிப் பெண் ணாக இருந்ததில்லை. அதன்பின் அவர்கள் ﷺ ஹஜ்ரத் ஹஃஃப்ஸஃஹ் பின்த் உமர் பின்  க்ஹத்தாப் (ர) அவர்கள், ஹஜ்ரத் ஜ்ஸைனப் பின்த் க்ஹுஜ்ஸய் மஹ் பின்த்  ஹாரித்ஸ் (ர) அவர்கள், ஹஜ்ரத் உம்மு சலமஹ் (ர) அவர்கள், ஹஜ்ரத் ஜ்ஸைனப் பின்த் ஜஹஷ் (ர) அவர்கள், ஹஜ்ரத் ஜுவைரியஹ் பின்த் ஹாரித்ஸ் (ர) அவர்கள், ஹஜ்ரத் உம்மு ஹபீபஹ் (ர) அவர்கள் மற்றும் ஹஜ்ரத் ஸஃபிய்யஹ் பின்த் ஹய் பின்  அக்ஹ்தப் (ர) அவர்களுடன் திருமணம் செய்து கொண்டார்கள். இறுதியாக, அவர்கள்ﷺ ஹஜ்ரத் மய்மூனஹ் பின்த் ஹாரித்ஸ் (ர) அவர்களுடன் திருமணம் செய்துகொண்டார்கள்.

### இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பிறந்த மக்கள்

இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பிறந்த மக்கள் அனைவரும் ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களுக்குப் பிறந்தவர்கள், ஹஜ்ரத் இப்பாஹீம் (ர) அவர்களைத்தவிர, இவர் ஹஜ்ரத் மாரியஹ் ஃகிப்த்திய்யஹ் (ர) அவர்களுக்குப் பிறந்தார்கள்.

### இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பிறந்த மகன்கள்:

1 **அல் ஃகாசிம் (ர)** *(இதுவே அவர்களுடைய ﷺ குடும்பப்பெயராகும்)*
2 **தய்யிப் (ர)**
3 **தாஹிர் (ர)**

*இவர்கள் அனைவரும் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய வாழ்க்கையி லேயே இறந்துவிட்டனர்.*

### இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பிறந்த மகள்கள்:

1 **ஜ்ஸைனப் (ர)** *(அவர்களுடைய ﷺ மூத்த மகள் அவார், இவர்களு டைய திருமணம் அவருடைய அத்தை மகன் அபுல் ஃஆஸ் பின் ரபீஉடன் நடந்தது)*
2 **ருஃகய்யஹ் (ர)** *(இவர்களுடைய திருமணம் ஹஜ்ரத் உத்ஸ்மான் பின் அஃப்பான் (ர) அவர்களுடன் நடந்தது)*
3 **உம்முகுல்த்ஸூ ம் (ர)** *(இவர்களுடைய திருமணம் ஹஜ்ரத் ருஃகய்யஹ் (ர) அவர்களுடைய மரணத்திற்குப்பிறகு ஹஜ்ரத் உத்ஸ்மான் பின் அஃப்பான் (ர) அவர்களுடன் நடந்தது)*
4 **ஃபாதிமா (ர)** *(இவர்களுடைய திருமணம் ஹஜ்ரத் அலி (ர) அவர்களு டன் நடந்தது, இவர்களுக்கு ஹஜ்ரத் ஹசன் (ர) மற்றும் ஹஜ்ரத் ஹுசைன் (ர) அவர்கள் பிறந்தார்கள். இவர்களைப்பற்றி இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் الْحَسَنُ والْحُسَيْنُ سَيِّدَا شَبَابِ أَهْلِ الْجَنَّةِ ஹசன் மற்றும் ஹுசைன் (ர) சுவர்க்கவாசிகளான வாலிபர்களுடைய தலை வர்களாவர்).*

*இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள், வரலாற்று ஆசிரியர் கள் இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் நான்கு மகள்களும் இருந்தனர் என்ற ஒத்தக் கருத்தினைக் கூறுகின்றனர்.*

### இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் நபித்துவம்

*நாற்பதாவது வயதில் அவர்களுக்கு ﷺ நபித்துவம் அருளப்பட்டது. ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு வஹி அருளப்படுவது துவக்க நிலையில் உண்மையான, தூய்மையான கனவுகளின்*

வடிவில் அமைந்தது. இறைத்தூதர் ﷺ அவர்கள் தங்கள் கனவில் காண்பது அனைத்துமே காலைப்பொழுதில் பிரகாசிக்கும் வகையில் உண்மையானவை யாகவே இருக்கும். அதன்பின் அவர்கள் ﷺ தனிமையினை விரும்பலானார் கள். அவர்கள் ﷺ ஹிரா குகையில் தனியாகவே தங்கும் வழக்கத்தினை ஆக்கிக் கொண்டார்கள். அங்கே அவர்கள் பல நாட்களும் இரவுகளும், அவர்கள் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் ஏற்படாதவரை தொடர்ந்து அல்லாஹ்வைத் தியானித்தவர்களாக, வழிபட்டவராகக் கழித்துவந்தார்கள். அதற்காக அவர்கள் ﷺ கட்டுச்சோறு தம்முடன் கொண்டு செல்வார்கள். உணவு தீர்ந்துவிட்டபின் மீண்டும் ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களிடம் வரு வார்கள், அவர்கள் தயாரித்துக் கொடுக்கும் உணவைத் தம்முடன் எடுத்துக் கொண்டு மீண்டும் தனிமையை நாடிச் சென்றுவிடுவார்கள். இதே வழக்கம் அவர்களுக்கு ﷺ வஹியின் உண்மை வெளிப்படும் வரை தொடர்ந்தது. அவர் கள் ﷺ ஹிரா குகையில் தங்கியிருந்தபோது திடீரென ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்கள் அவர்களிடம் ﷺ வந்தார்கள், கூறினார்கள், முஹம்மது ﷺ அவர்களே, படியுங்கள் (ஓதுங்கள்), அவர்கள் ﷺ கூறினார்கள், நான் படிப்பவன் அல்ல, அவர்கள் ﷺ கூறுகிறார்கள், வானவர் என்னைப் பிடித்து என்னால் தாங்கிக் கொள்ளவும் முடியாத வகையில் மிகவும் வலுவான முறையில் அணைத்து, அதன்பின் விட்டுவிட்டபின் கூறினார், படியுங்கள் (ஓதுங்கள்), அவர்கள் ﷺ மீண்டும் அதே பதிலைக்கொடுத்தார்கள், நான் படிப்பவன் அல்ல, அவர்கள் ﷺ கூறுகிறார்கள், அந்த வானவர் என்னை மீண்டும் அதைவிட மிகவும் வலு வான முறையில் அணைத்தார், அதன் காரணமாக எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது, அதன்பின் அவர் கூறினார், படியுங்கள் (ஓதுங்கள்), அவர்கள் ﷺ கூறினார்கள், நான் படிப்பவன் அல்ல, அவர்கள் ﷺ கூறுகிறார்கள், அந்த வான வர் மீண்டும் மூன்றாவது முறையாக என்னைப் பிடித்து, என்னை மூன்றாம் முறையாக அணைத்தபின் என்னை விட்டுவிட்டார், அதன்பின் கூறினார்:

ٱقْرَأْ بِٱسْمِ رَبِّكَ ٱلَّذِى خَلَقَ ﴿١﴾ خَلَقَ ٱلْإِنسَـٰنَ مِنْ عَلَقٍ ﴿٢﴾ ٱقْرَأْ وَرَبُّكَ ٱلْأَكْرَمُ ﴿٣﴾ ٱلَّذِى عَلَّمَ بِٱلْقَلَمِ ﴿٤﴾ عَلَّمَ ٱلْإِنسَـٰنَ مَا لَمْ يَعْلَمْ ﴿٥﴾

பொருள்: ஓதுவீராக, (நபியே) படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு. (உறைந்த) இரத்தக்கட்டியிலிருந்து மனிதனை அவன் படைத்தான். ஓதுவீராக, மேலும், உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட்கொடை யாளன் எனில், அவனே எழுதுகோலின் மூலம் கற்றுக்கொடுத்தான், அவன் அறியாதிருந்தவற்றையெல்லாம் கற்றுக்கொடுத்தான் (அல் அலஃக்:1-5).

இவ்வகையில், இந்த முதன்முதலாக அருளப்பட்ட அருள்வாக்கின் வசனங்களை ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்கள் வாயிலாகக் கேட்டு, உடனே ஹிரா குகையிலிருந்து விட்டிற்குத் திரும்பி வந்தார்கள், இந்த அபூர்வமான நிகழ்வின் காரணமாக அவர்களுடைய மனது நடுங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் ﷺ ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களிடம் வந்து கூறினார்கள், என்னைக் கம்பிளியால் போர்த்துங்கள், என்னைக் கம்பிளியால் போர்த்துங்கள். வீட்டிலிருந்தவர்கள் அவர்களைக் கம்பிளியால் போர்த்தினர். அவர்களுடைய ﷺ அச்சம் நீங்கியபின் அவர்கள் ﷺ தன்னுடைய பிரியமான மனைவி ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்களிடம் இந்த நிகழ்வினைப்பற்றி விளக்கமாக எடுத்துக் கூறி, எனக்கு என்னுடைய உயிரைப்பற்றிய அச்சம் ஏற்பட்டுவிட்டது என்று கூறலானார்கள். அவர்களுடைய ﷺ கண்ணியமிகு மனைவி அவர்கள், அவர்களுக்கு ஆதரவும் அச்சத்திற்குரியது ஒன்றுமில்லை என்று கூறும் வகையில் கூறினார்கள், தாங்கள் ﷺ அச்சம் கொண்டிருப்பதில் எந்த உண்மையுமில்லை, அல்லாஹ்வின்மீது சத்தியமாக, அல்லாஹ் ஒருபோதும் எவ்வகையிலும் உங்களை இழிவுபடுத்தமாட்டான், நீங்கள் மேலான பண்புகளைக்கொண்டுள்ளவர்கள், நீங்கள் வலிமையற்ற, திக்கற்றவர்களுடைய பாரத்தை உங்கள் தலைமீது சுமக்கின்றீர்கள், நொடிந்தவர்களுக்காக நீங்கள் சம்பாதிக்கின்றீர்கள், விருந்தோம்பலில் உங்களுக்கு நிகர் யாருமில்லை, இக்கட்டான, கஷ்டமான நிலையிலும் உண்மைக்கு ஆதரவாக உறுதியுடன் நிற்கின்றீர்கள். இவ்வகையான சிறப்புக்குரிய பண்புகளையுடைய ஒரு மனிதர் ஒருபோதும் இழிவுக்கும் அழிவுக்கும் ஆளாக்கப்படமாட்டார். அத்துடன் மேலும் நிம்மதியளிக்கும் வகையில், ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்கள், அவர்களை ﷺ தன்னுடைய சிற்றப்பன் மகனான வரஃகஹ் பின் நவ்ஃபலிடம் அழைத்துச்சென்றார்கள். அவர் அறியாமை காலத்தில் கிறித்துவ மதத்தைத் தழுவியிருந்தார் மற்றும் ஹீப்ரு மொழி அறிந்தவராக இருந்தார். அவர் மிகவும் வயோதிகத்தை அடைந்த நிலையில் கண் பார்வையும் இழந்தவராகவே இருந்தார். ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்கள், அவர்களுக்கு ﷺ ஏற்பட்ட நிகழ்வினைப்பற்றி அவருக்கு எடுத்துக்கூறிவிட்டு மேலும் கூறினார்கள், சகோதரரே, உங்கள் சகோதரர் மகன் வாயிலாகவே அவர்களுடைய நிலையினைப்பற்றி கேட்டுக்கொள்ளுங்கள். அவர்கள் கூறினார்கள், என் சகோதரர் மகனே, நீர் பார்த்ததையெல்லாம் எடுத்துக்கூறுவீராக. அவர்கள் ﷺ துவக்கத்திலிருந்து இறுதிவரைத் தமக்கு நிகழ்ந்ததை எடுத்துக்கூறினார்கள். அதனைக்கேட்ட வரஃகஹ் பின் நவ்ஃபல் அவர்கள், தம்மைக் கட்டுப்படுத்த முடியாமல் உடனே கூறலானார், இவர் அதேவானவர்தான், இவரைத்தான் அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் ஈசா (அ) அவர்களிடமும் தன்னுடைய அருள்வாக்குகளான வஹியைக் கொடுத்து அனுப்பினான். நான் உங்களுடைய இந்த நபித்துவத்தின் காலக்கட்டம் துவங்கும்

*இச்சமயத்தில் வாலிபனாக இருந்திருக்கக்கூடாதா! உங்களுடைய சமூகத்தினர் உங்களையே நாட்டைவிட்டு வெளியேற்றும்போது நான் உயிருடன் இருந்திருக்கக்கூடாதா! இறைத்தூதர் ﷺ அவர்கள் இதனைக்கேட்டு ஆச்சரியத்துடன் கேட்டார்கள், இவர்கள் என்னையா வேளியேற்றுவார்கள்? வரஃகஹ் பின் நவ்ஃபல் கூறினார், இவை அனைத்தும் உண்மையே, ஏனெனில், எந்த ஒருவரும் உங்களைப்போன்று சத்தியத்தைப்பற்றிய செய்தியை மக்களுக்கு அளித்தபோதெல்லாம் மக்கள் அவருடைய விரோதிகளாக மாறிவிட்டுள்ளனர். எனக்கு உங்களுடைய அந்த நபித்துவத்தின் காலம்வரை அவகாசம் கிடைக்குமானால் நான் உங்களுக்கு முழுமையாகவே உதவிசெய்வேன். ஆனால், வரஃகஹ் சில நாட்களுக்குப்பின் இறந்துவிட்டார்.(புக்ஹாரி)*

*மற்றொரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது, இந்த நபிமொழியின் அறிவிப்பாளரான ஹஜ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அன்ஸாரி (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் சிறிது காலம் வஹி அருளப்படுவது நின்றுவிட்டதைப்பற்றிக் குறிப்பிடும்போது கூறினார்கள், ஒரு நாள் நான் சென்றுகொண்டிருந்தேன், திடீரென வானத்தின் புறத்திலிருந்து ஒரு சப்தம் வந்தது. நான் என் தலையை உயர்த்தி வானத்தின் புறமாகப் பார்த்ததேன், அப்போது ஹிரா குகையில் என்னிடம் வந்த அதே வானவர் வானத்திற்கும் பூமிக்கும் இடையில் ஒரு நாற்காலியின்மீது அமர்ந்துகொண்டிருந்தார், நான் அதனைப்பார்த்து பயந்துவிட்டேன், உடனே வீட்டிற்கு வந்து மிண்டும் என்னைக் கம்பிளியால் போர்த்துங்கள் என்று கூறினேன். அப்போது அல்லாஹ்விடமிருந்து கீழ்க்காணும் வசனம் அருளப்பட்டது.*

يَٰٓأَيُّهَا ٱلۡمُدَّثِّرُ ۝١ قُمۡ فَأَنذِرۡ ۝٢ وَرَبَّكَ فَكَبِّرۡ ۝٣ وَثِيَابَكَ فَطَهِّرۡ ۝٤

*பொருள்: போர்த்திக்கொண்டு படுத்திருப்பவரே, எழுந்து எச்சரிக்கை செய்வீராக. மேலும், உம் இறைவனின் மேன்மையைப் பிரகடனப்படுத்துவீராக. மேலும், உம் ஆடைகளைத் தூய்மையாக்குவீராக (அல் முத்தத்ஸிர்: 1-4)*

*அதன்பின் வஹி விரைவாகவே அடுத்தடுத்த அருளப்பட்டுவந்தது.*

*இந்த திருக்ஃஃகுர்ஆன் வசனங்களில் அல்லாஹ் அவர்களுக்குக் ﷺ கட்டளையிடுகின்றான், நீங்கள் உங்கள் குலத்தாரிடம் அல்லாஹ்வின் செய்தியை எடுத்துரைத்துவிடுங்கள். மக்களை அல்லாஹ்வின் புறமாக அழையுங்கள். அதன்பின் அவர்கள் ﷺ இந்த அழைப்புப் பணியைப் பொதுவாகவே அனைவருக்*

கும் எடுத்துரைக்கவேண்டும் என்று தயாராகிவிட்டார்கள். சிறுவர், பெரியவர், அடிமை, சுதந்திரமானவர், ஆண், பெண், கருப்பர், வெள்ளையர், ஒவ்வொருவருக்கும் அவர்கள் ﷺ அல்லாஹ்வின் அழைப்பை முன்வைத்தார்கள். சிலர் அவர்களுடைய அழைப்பினை மனதார ஏற்றுக்கொண்டு இஸ்லாத்தைத் தழுவினார்கள். ஆனால், மக்காஹ்வின் இறைமறுப்பாளர்கள் அவர்களுக்கு அனைத்து விதமான இன்னல்களையும் விளைவித்தார்கள், அவர்களைப் பல்வேறு வகையில் கஷ்டங்களுக்கும் இடையூறுகளுக்கும் ஆளாக்கினார்கள். ஆனால், அல்லாஹ் தஆலா அவர்களை அவர்களுடைய ﷺ சிறிய தந்தை அபூதாலிப் அவர்களைக்கொண்டு பெரும் பாதுகாப்பினை அளித்தான், ஏனெனில், ஃகுரைஷிய வம்சத்தினரிடையே அபூதாலிப் அவர்களுக்கு தனிப்பெரும் அந்தஸ்து இருந்தது. அவர் மரியாதைக்கும் கண்ணியத்திற்கும் உரிய நல்ல மனிதராக இருந்தார். மக்கள் அவர்களுடைய சொல்லை ஒருபோதும் தட்டுவதில்லை, அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள். அவர்கள் இருக்கும்போது எவருக்குமே அவர்களுக்கு ﷺ எதிராக எதுவும் கூறுவதற்குத் தைரியம் இருக்காது, ஏனெனில், அவர்கள் அனைவருக்குமே அபூதாலிப் அவர்கள் முஹம்மத் ﷺ அவர்கள்மீது அளவற்ற அன்பும் பாசமும் வைத்திருக்கின்றார் என்பது நன்றாகவே தெரிந்திருந்தது.

இமாம் இப்னுல் ஜவ்ஜ்ஸி (ரஹ்)அவர்கள் எழுதுகிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் மூன்றாண்டு காலம் மறைமுகமான வகையில் தனித்தனியாகவே அழைப்பு கொடுத்துவந்தார்கள், அதன்பின் இந்த வசனமான:

فَٱصۡدَعۡ بِمَا تُؤۡمَرُ ﴿٩٤﴾

பொருள்: எனவே, (நபியே), உமக்குக்கட்டளையிடப்படுகின்றவற்றைவெளிப்படையாகக் கூறிவிடும் (அல் ஹிஜ்ரு:94) எனும் வசனம் அருளப்பட்டபின்பு அவர்கள் பகிரங்கமாகவே இஸ்லாத்தின்பால் மக்களை அழைக்கத்தவங்கினார்கள். அதன்பின் கீழ்காணும் வசனம் அருளப்பட்டது.

وَأَنذِرۡ عَشِيرَتَكَ ٱلۡأَقۡرَبِينَ ﴿٢١٤﴾

பொருள்: உம்முடைய மிக நெரங்கியள உறவினர்களை எச்சரிக்கை செய்யுங்கள் (அஷ்ஷுஃஅரா:214)

அதன்பின், அவர்கள் ﷺ ஸஃபா குன்றின்மீது ஏறி மக்களுக்குக் குரல் கொடுத்தார்கள். யா ஸஃபாஹா (காலைப்பொழுதே), இதோ கேளுங்கள், அறிந்து

கொள்ளுங்கள். மக்கள் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள், யார் குரல் கொடுக்கின்றார், மக்கள் கூறினார்கள், அது முஹம்மத் ﷺ அவர்களுடைய குரல். அதன்பின் அனைவரும் அவர்களிடம் ﷺ வந்து கூடினர், அப்போது அவர்கள் ﷺ கூறினார்கள்: இன்னாருடைய மக்களே, அப்து மனாஃபுடைய மக்களே, அப்துல் முத்தலிபுடைய மக்களே, நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள், நான் உங்களுக்கு இந்த குன்றுக்குப் பின்னால் உங்கள்மீது தாக்குதல் நடத்துவதற்காக ஒரு குதிரைப்படையினர் நின்றுகொண்டிருக்கின்றனர் என்று கூறினால் நீங்கள் என்னை நம்புவிர்களா? அவர்கள் கூறினார்கள், நாங்கள் ஒருபோதும் உங்களைப் பொய் கூறுபவராகக் கண்டதில்லை. அப்போது அவர்கள் ﷺ கூறினார்கள்: அப்படியென்றால், நான் உங்களுக்கு கடுமையான தண்டனையைப்பற்றி எச்சரிக்கிறேன். ஆபூ லஹப் கூறினார், உமக்கு ﷺ அழிவு உண்டாகட்டும், இதற்காகவா எங்களை இங்கே குரல் கொடுத்து அழைத்தீர்? அதன்பின், அவர்கள் ﷺ நின்றுகொண்டிருந்தபோது கீழ்க்காணும் அத்தியாயம்

تَبَّتْ يَدَآ أَبِى لَهَبٍ وَتَبَّ ۝١ مَآ أَغْنَىٰ عَنْهُ مَالُهُۥ وَمَا كَسَبَ ۝٢ سَيَصْلَىٰ نَارًا ذَاتَ لَهَبٍ ۝٣ وَٱمْرَأَتُهُۥ حَمَّالَةَ ٱلْحَطَبِ ۝٤ فِى جِيدِهَا حَبْلٌ مِّن مَّسَدٍۭ ۝٥

முழுவதுமாக அருளப்பட்டது. (புக்ஹாரி)

### அவர்களுடைய ﷺ பொறுமை

அவர்களுடைய ﷺ சமூகத்தார் அவர்களுக்கு எண்ணற்றத் துன்பங்களைக் கொடுத்தனர், ஆனால், அவர்கள் ﷺ ஒருபோதும் பொறுமையைக் கைவிடவில்லை. மக்காஹ்விலிருந்த இறைமறுப்பாளர்களின் புறமாக இன்னல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டபோது, அவர்கள் ﷺ நபித்தோழர்களை அபிசீனியாவுக்கு நாடுபெயர்ந்து ஹிஜ்ரத் செய்து செல்லுமாறு கட்டளையிட்டார்கள்.

பிரபல இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் இப்னு இஸ்ஹாஃக் அவர்கள் எழுதுகிறார்கள், அபூ தாலிப் அவர்களுடைய மரணம் ஏற்பட்டுவிட்டபின்பு மக்காஹ்வின் இறைமறுப்பாளர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு மிக அதிகமாகவே தொல்லைகளைக் கொடுக்க ஆரம்பித்தனர், அவர்கள் உயிருடன் இருந்த வரையில் இதற்கான தைரியம் அவர்ளுக்கு வந்ததில்லை. ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், அபூ தாலிப் அவர்கள்

மரணமடைந்துவிட்டபின்பு ஃகுரைஷிகளின் தொல்லைகள் முழுவீச்சில் இழைக்கப்பட்ட நிலையில் அவர்கள் ﷺ கூறினார்கள்: يَاعَمُّ، مَا أَسْرَعَ مَا وَجَدْتُ فَقْدَكَ உங்களுடைய பிரிவின் இழப்பு எனக்கு விரைவாகவே பாதிக்கத்துவங்கி விட்டதே (முஃஜம் தபரானி).

ஒரு சமயத்தில் இறைத்தூதர் ﷺ அவர்கள் தொழுகையில் இருந்தார்கள், அப்போது அங்கே அவரது வலது மற்றும் இடது புறங்களில் ஃகுரைஷிகளில் சிலர் நின்றுகொண்டிருந்தனர். நபி ﷺ அவர்களுக்கு அருகாமையில் ஒட்டகத் தின் குடல் கிடந்தது. ஃகுரைஷிகளில் சிலர் கூறினர், இந்தக் குடலை எடுத்து அவர்களுடைய ﷺ முதுகின்மீது யார் வைப்பார்கள்? உஃக்பஹ் பின் முஃஈத் முன் வந்து அதனை எடுத்து வைத்தவிட்டடான், அதன் காரணமாக இறைத் தூதர் ﷺ அவர்கள் (சஜ்தாவிலிருந்து) தலையைத் தூக்க முடியாமற்போயிற்று. ஹஜ்ரத் ஃபாதிமா (ர) அவர்களுக்கு இதனைப்பற்றித் தெரியவந்தபோது அவர்கள் உடனே வந்து அதனை இறைத்தூதர் ﷺ அவர்களுடைய முதுகிலி ருந்து அகற்றி எறிந்துவிட்டு இந்தத் தீயச் செயலைச் செய்தவர்களைச் சபிக்க லானார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் தொழுகையை முடித்துக்கொண்டபின் கூறினார்கள்: ஓ அல்லாஹ், இந்தக் ஃகுரைஷிகளின் தலைவர்களை அழித்து விடுவாயாக (புக்ஹாரி, முஸ்லிம்).

ஒரு நாள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கஅபாவின் முற்றத்தில் தொழுகையை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள், அப்போது அங்கே உஃக்பஹ் பின் முஃஈத் வந்தான், அவன் நபி ﷺ அவர்களுடைய தோளைப் பிடித்து அவர்களு டைய கழுத்தில் ஒரு துணியைச் சுற்றிப் பலமாக இறுக்கி இழுக்க ஆரம்பித் தான். ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்களுக்குத் தெரியவந்தது, அவர்கள் உடனே வந்து அவனுடைய தோள்பட்டையைப் பிடித்து இழுத்துத்த ள்ளிவிட்டார் கள், அதன் பின் கூறினார்கள், நீ இப்படிப்பட்ட ஒரு மனிதரைக் கொல்ல நினைக்கிறாயா? அவருடைய குற்றம்தான் என்ன, அல்லாஹ் என்னுடைய இரட்சகன் என்று அவர் கூறுவது ஒரு குற்றமா? அவரோ உங்களிடத்தில் உங்க ளுடைய இறைவனிடமிருந்து தெளிவான ஆதாரங்களைக் கொண்டுவந்துள் ளார் (புக்ஹாரி).

### சமூகத்தாருடன் அவர்களுடைய ﷺ அன்பும் பாசமும்

தாயிஃப் நகரத்தின் நிகழ்வு மிகவும் பிரபலமானது. இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய பாசமிகு சிறிய தந்தை அபூ தாலிப் மற்றும் அவர்களுடைய

கண்ணியமிகு மனைவியான ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) ஆகியோருடைய மரணத்திற்குப்பிறகு இஸ்லாத்தின் அழைப்பினை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக தாயிஃப் நகரத்திற்குப் பயணம் மேற்கொண்டார்கள். அவர்கள் ﷺ அந்நகரத்தின் தலைவர்களுக்கு முக்கியத்துவமளித்து அவர்களைச் சந்தித்து இஸ்லாத்தின்புறம் அழைத்தார்கள். ஆனால், அவர்கள் தவறான முறையில் நடந்து கொண்டு போக்கிரிகள் சிலரை ஏவிவிட்டனர், அதன் காரணமாக, அவர்களுக்கு ﷺ இன்னல்களைச் சந்தக்க நேரிட்டது. அவர்கள் எந்த அளவிற்கு கற்களை வீசினார்கள் என்றால் அவர்களுடைய ﷺ உடலின் சில பகுதிகளிலிருந்து இரத்தம் சொட்டியது. இதன் காரணமாக, அவர்கள் ﷺ தாயிஃப் நகரத்தை விட்டுத் திரும்பி வரவேண்டியிருந்தது. திரும்பிச்செல்லும்போது அவர்கள் ﷺ கூறினார்கள், நான் தாயிஃப் நகதர்தைவிட்டு மனவேதனையுடன் திருஜம்பி வந்தேன், நான் ஃகர்னு த்ஸஃஆலிப் இடத்தை வந்தடைந்தபோது எனக்குச் சீரான நினைவு திரும்பியது. நான் என் தலையை உயர்த்திப் பார்த்தபோது மேகத்தின் ஒரு சிறு பகுதி என்மீது நிழலிட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்தேன், நான் அங்கே ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்களும் இருந்ததைக் கண்டேன். அவர்கள் எனக்குக் குரல் கொடுத்துக் கூறினார்கள், அல்லாஹ் தஆலா உங்களைப்பற்றிய உங்கள் சமூகத்தினருடைய பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டான், அவர்கள் உங்களுக்கு அளித்த பதிலையும் கேட்டுக்கொண்டான். அல்லாஹ் தஆலா உங்களிடம் மலைகளைக் கையாளும் வானவர்களை அனுப்பியுள்ளான். நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ வானவர்களுக்கு அதற்கான கட்டளையிடுங்கள். அதன்பின், எனக்கு மலைகளைக் கையாளும் வானவர்கள் குரல் கொடுத்தனர், அவர்கள் எனக்கு சலாம் சொல்லியபின் கூறினார்கள், முஹம்மத் ﷺ அவர்களே, (அவர்களும் அவ்வாறே கூறியவர்களாக) நீங்கள் என்ன விரும்புகறீர்களோ அதற்கான கட்டளைளை எனக்கு இடுங்கள், நீங்கள் விரும்புவீர்களானால், நான் இரண்டு புறத்திலுமுள்ள மலைகளை நகர்த்தி ஒன்று சேர்த்துவிடுவேன், இவர்கள் அனைவருமே நொறுங்கி அழிந்துவிடுவார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், எனக்கு நம்பிக்கை இருக்கின்றது, அல்லாஹ் தஆலா இவர்களுடைய சந்ததிகளில் எப்படிப்பட்ட வழித்தோன்றல்களைப் படைப்பான் என்றால், அவர்கள் அல்லாஹ் ஒருவனை மட்டும் வணங்குவார்கள், அவனுடன் யாரையும் இணை வைக்கவே மாட்டார்கள்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் மேற்கொள்ளப்படும் நாட்களில் மக்களிடம் அவர்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்று கூறுவார்கள், எனக்கு இங்கே யார் தங்க இடமளிப்பார்கள். நான் என்னுடைய இரட்சகனுடைய தூதை எடுத்துரைப்பதில் யார் எனக்கு உதவி செய்வார்கள்?

அவர்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும், ஏனெனில், ஃகுரைஷிகள் என்னை என்னுடைய இரட்சகனான அல்லாஹ்வின் தூதுவத்தை எடுத்துரைக்க முடியாமல் தடுத்து வருகின்றனர்.

சில நேரங்களில் ஒரு மனிதர் எமன் நாட்டிலிருந்து வந்தாலோ, எகிப்திலிருந்து வந்தாலோ, அவருடைய வம்சத்தினைச் சார்ந்தவர்கள் அவரிடம் வந்து அவருக்குக் கூறுவார்கள், ஃகுரைஷிகளின் இந்த வாலிபரிடமிருந்து பாதுகாப்பாக இருங்கள், அவர் உங்களை வழிதவறச்செய்துவிடக்கூடாது. இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்களுடைய கூடாரங்களின் புறமாகச் செல்லும்போது அவர்கள் அவர்களை விரல்களால் சைகை செய்து அடையாளம் காட்டுவார்கள். இருப்பினும், இறைத்தூதர் ﷺ அவர்கள் உஃக்பாவிற்கு அருகில் பதினாறு நபர்களைச் சந்தித்து அவர்களுக்கு இஸ்லாத்திற்கான அழைப்பினைக் கொடுத்தார்கள். அல்லாஹ்வின் அருளான் அவர்கள் அனைவருமே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். அதன்பின் அவர்கள் மதீனாவிற்குத் திரும்பிச்சென்றபோது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதன் பலனாக அவர்களுடைய வீட்டார்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். இவ்வகையில், படிப்படியாக மதீனாவாசிகளான அன்ஸாரிகளின் எந்த ஒரு குடும்பமும் அவர்களில் சிலர் முஸ்லிமாக இல்லாத குடும்பமாக இருக்கவில்லை. இவ்வகையில், உஃக்பாவில் முதலாவது மற்றும் இரண்டாவது சந்திப்பு மற்றும் பைஃஅத்துகள் இரகசியமானவையாகவே இருந்தன. ஆனால், அல்லாஹ் தஆலா முஸ்லிம்களுக்கு மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி வழங்கிவிட்டபின்பு மக்கள் பகிரங்கமாகவே மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்களாகச் செல்லத்துவங்கினர்.

## இறைத்தூதர் அவர்களுடைய ﷺ ஹிஜ்ரத்

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்களுடன் மக்காஹ்விலிருந்து புறப்பட்ட த்ஸவ்ர் குகைக்குச் சென்றார்கள், அங்கே மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். ஃகுரைஷித் தலைவர்கள் அவர்களைப் ﷺ பின்தொடர்ந்து த்ஸவ்ர் குகை வரையிலும் வந்தவிட்டார்கள், ஆனால், அவர்கள் அவர்களையும் ﷺ அவர்களுடைய துணைவரான ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்களையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதன்பின் அவர்கள் ﷺ மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் ﷺ மதீனாவுக்குச் சென்றடைந்தபோது மதீனாவாசிகள் அவர்களை உற்சாகமாக மரியாதையுடன் வரவேற்றார்கள். முதன்முதலாக அவர்கள் ﷺ மதீனாவில் மஸ்ஜிதைக் கட்டினார்கள்.

### இறைத்தூதர் அவர்களுடைய ﷺ ங்கஸ்வாக்கள் (போர்கள்)

*ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் மக்காஹ்விலிருந்து வெளியேற்றப்பட்டபோது ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் கூறினார்கள், இவர்கள் தங்களுடைய நபியையே வெளியேற்றியுள்ளார்கள் إِنَّا للهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ இவர்கள் நிச்சயம் அழிந்தே போவார்கள். அதன்பின் அல்லாஹ் தஅலா இந்த வசனத்தை இறக்கியருளினான்:*

أُذِنَ لِلَّذِينَ يُقَـٰتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُواْ ۚ ﴿٣٩﴾

*பொருள்: எவர்களுக்கு எதிராகப் போர் தொடுக்கப்படுகின்றதோ அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுவிட்டது, ஏனெனில், அவர்கள் கொடுமைபடுத்தப்பட்டிருக்கின்றார்கள் (அல் ஹஜ்:39)*

*இது ஜிஹாது பற்றிய முதன்முதலான இறை வசனமாகும்.*

### இறைத்தூதர் அவர்களுடைய ﷺ ஹஜ் மற்றும் உம்ரா

*அவர்கள் ﷺ தன்னுடைய ஆயுளில் ஒரு முறை மட்டுமே ஹஜ் நிறைவேற்றியுள்ளார்கள், அதனை ஹஜ்ஜதுல் வதா என்று கூறுவார்கள், மற்றும் அவர்கள் நான்கு முறை உம்ரா நிறைவேற்றியுள்ளார்கள். அவர்கள் ﷺ ஹஜ்ஜுடன் சேர்த்து செய்த உம்ராவைத்தவிர மற்ற உம்ராக்கள் அனைத்தினையும் அவர்கள் ﷺ துல் ஃகஅதா மாதத்திலேயே நிறைவேற்றியுள்ளார்கள்.முதலாவது, ஹுதைபியா எனும் இடத்தில் மக்காஹ்வின் இணை வைப்பாளர்கள் அவர்களை ﷺ உம்ரா செய்ய அனுமதிக்கமாட்டோம் என்று தடுத்தபின், ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட உம்ரா. இரண்டாவது, ஃகஜ்தாவாக நிறைவேற்றிய உம்ரா. மூன்றாவது, ஜஅரானாவின் உம்ரா, நான்காவது உம்ரா அவர்கள் ﷺ ஹஜ்ஜுடன் சேர்த்து செய்த உம்ரா.*

### இறைத்தூதர் அவர்களுடைய ﷺ புனித உடலமைப்பு

*ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் மிகவும் உயரமானவர்களாகவோ அல்லது மிகவும் குட்டையானவர்களாகவோ*

*இருக்கவில்லை. அவர்களுடைய ﷺ தலை சற்று பெரியதாகவும், தாடி கனத்தும் இருந்தது. உள்ளங்கைகள் மற்றும் கால்கள் நிறைவானவையாக இருந்தன. முகத்தில் சிகப்பு நிறம் இயல்பாகவே காணப்பட்டது. மார்பு முதல் தொப்புள் வரையிலும் ஒரு தாரையாக முடி வளர்ந்து இருந்தது. எலும்பு முட்டுக்கள் உறுதியானவையாக இருந்தன. நடக்கும்போது சிறு சிறு அடிகளை எடுத்து வைத்து நடப்பார்கள், நடப்பது ஒரு பள்ளமான பகுதியில் இறங்குவதுபோன்று தோன்றும். நான் அவர்களுக்கு முன்பாகவும் அவர்களுக்குப் பிறகும் அவர்களைப்போன்ற ஒரு மனிதரைக் கண்டதில்லை (முஸ்னத் அஹ்மத்).*

**عَنْ علَيٍّ قالَ: كَانَ رَسُوْلُ اللهِ صلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ لَيْسَ بالطَّوِيْلِ وَلاَ بالقصِيْرِ، ضَخْمَ الرَّأسِ واللِّحْيَةِ، شَثْنَ الْكَفَّيْنِ وَالْقَدَمَيْنِ، مُشْرَبٌ وَجْهُهُ حُمْرَةً، طَوِيْلُ الْمَسْرُبَةِ، ضَخْمُ الْكَرَادِيْسِ، إِذَا مَشَى تَكَفَّأَ تَكَفُّؤاً كَأَنَّمَا يَنْحَطُّ مِنْ صَبَبٍ، لَمْ أَرَ قَبْلَهُ وَلاَ بَعْدَهُ مِثْلَهُ صلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ**

## இறைத்தூதர் அவர்களுடைய ﷺ நற்குணங்கள்

*அவர்கள் ﷺ மனிதர்களிலெல்லாம் மிக்கக் கொடைத்தன்மையுடையவர்களாகவும், அழகு மிக்கவராகவும், மென்மையான சுபாவம் கொண்டவராகவும், விருந்தோம்பல் பேணுபவராகவும், தூய்மையை விரும்புபவராகவும், அடக்கமானவராகவும் இருந்தார்கள். அல்லாஹ் தஆலா அவர்களைப்பற்றிக் கூறுகின்றான்:*

وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ ﴿٤﴾ (القلم:4)

*பொருள்: திண்ணமாக, நற்குணத்தின் மிக உன்னதமான நிலையில் நீர் இருக்கின்றீர் (அல் ஃகலம்:4)*

*அவர்கள் ﷺ மிகவும் நாணமுடையவர்களாக இருந்தார்கள், அவர்கள் ﷺ மற்றவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்குவார்கள், தானும் அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் ﷺ ஸதஃகா ஏற்றுக்கொள்வதுமில்லை, ஸதஃகாவின் பொருளை உண்பதுமில்லை. தன்னுடைய தனிப்பட்ட ஒரு விஷயத்திற்காக அவர்கள் ﷺ கோபப்படுவதில்லை, ஆனால், அல்லாஹ்விற்காகக் கோபப்படுவார்கள். எது தயாராக இருக்கின்றதோ அதனைச் சாப்பிட்டுவிடுவார்கள், உணவு விஷயத்தில் எந்த நிர்ப்பந்தமும் கொள்வதில்லை, சாய்ந்து உட்கார்ந்த நிலையில் சாப்பிடமாட்டார்கள், மாறாக, குந்திய நிலையில் சாப்பிடு*

வார்கள். மாதங்கள் கடந்துவிடும் அவர்களுடைய ﷺ வீட்டில் அடுப்பு எரியா மலே இருக்கும். ஏழை எளியவர்களுக்கு மிகவும் கவனம் செலுத்துவார்கள், அவர்களைத் தம்மிடம் உட்கார வைப்பார்கள், அவர்களுக்கு உதவி செய்வார் கள். நோய்வாய்ப்பட்டவர்களிடம்சென்று நலம் விசாரிப்பார்கள், ஜனாசா வுடன் சென்று கலந்துகொள்வார்கள்.

அவர்கள் ﷺ சிரித்தும் கேலியாகவும் பேசுவார்கள், எப்போதுமே உண்மை யையே பேசுவார்கள், புன்முறுவல் பூப்பார்கள் ஆனால், வாய் திறந்து சிரிக்க மாட்டார்கள். அவர்கள் ﷺ தங்களுடைய வீட்டுவேலைகளைத் தாமே செய்து கொள்வார்கள், அவர்கள் ﷺ கூறுகிறார்கள்:

**خَيْرُكُمْ خَيْرُكُمْ لأَهْلِهِ، وَأَنَا خَيْرُكُمْ لأَهْلِيْ** (الترمذي)

பொருள்: உங்களில் மிகச் சிறந்தவர் யெரெனில், உங்களில் உங்கள் வீட்டா ருடன் சிறந்த முறையில் நடந்துகொள்பவர்கள்தான். நான் உங்கள் அனைவரி லும் தன்னுடைய வீட்டாருடன் சிறந்த முறையில் நடந்துகொள்பவனா வேன். (திர்மிதி)

ஹஜ்ரத் அனஸ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

**خَدِمْتُ رَسُوْلَ اللهِ صلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ عَشَرَ سِنِيْنَ، والهِ مَا قَالَ لِيْ أُفاًّ قَطُّ، وَلاَ قَالَ لِيْ لِشَيءٍ: لِتمَ فَعَلْتَ كَذَا؟ وَهَلاَّ فَعَلْتَ كَذَا؟** (مسلم)

பொருள்: நான் இறைத்தூதர் ﷺ அவர்களுக்குப் பத்து ஆண்டுகள் பணிவிடை செய்தேன், அல்லாஹ்வினட்மீது சத்தியமாக அவர்கள் ஒரு முறையும்கூட சீ என்று சொன்னதிலலை, மேலும், அவர்கள் எந்த ஒன்றைப்பற்றியும் என்னை அவ்வாறு ஏ் செய்தாய்? ஏன்றோ, இவ்வாறு ஏன் செய்யவில்லை? என்றோ கூறியதில்லை. (முஸ்லிம்).

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய எண்ணற்ற அற்புதங்கள் உள்ளன, உதாரண மாக, அவர்களுடைய ﷺ கட்டளையினால் சந்திரன் இரு பகுதிகளாகப் பிளந்து விட்டது, அவர்களுடைய நெருக்கத்தை இழந்து ஒரு பேரீத்த மரத்துண்டு அழத்துவங்கியது மற்றும் வஹியின் மூலம் அவர்களுக்கு ﷺ மறைவான பல விஷயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

*ஹஜ்ரத் அனஸ் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக் கிறார்கள்*

**أُعْطِيْتُ خَمْساً لَمْ تُعْطَهُنَّ أَحَدٌ قَبْلِي: نُصِرْتُ بالرُّعْبِ مَسِيْرَةَ شَهْرٍ، وَجُعِلَتْ لِي الأَرْضُ مَسْجِداً وَطَهُوْراً، فَأَيُّمَا رَجُلٍ مِنْ أُمَّتِي أَدْرَكَتْهُ الصَّلاَةُ فَلْيُصَلِّ، وَأُحِلَّتْ لِي الْمَغَانِمُ وَلَمْ تَحِلَّ لأَحَدٍ قَبْلِي، وَأُعْطِيْتُ الشَّفَاعَةَ، وَكَانَ النَّبِيُّ يُبْعَثُ إِلَى قَوْمِهِ خَاصَّةً وَبُعِثْتُ إِلَى النَّاسِ عَامَّةً**

*பொருள்: எனக்கு முன்பாக யாருக்குமே வழங்கப்படாத ஐந்து விஷயங்கள் எனக்கு வழங்கப்பட்டள்ளன, கம்பீரமான தோற்றத்தின் மூலம் ஒரு மாத பயண தூரம் வரையிலும் எனக்கு உதவி செய்யப்பட்டுள்ளது, பூமி அனைத் துமே எனக்காக தூய்மையானதாகவும் தொழுகைக்கு உகந்த இடமாகவும் ஆக்கப்பட்டுள்ளது. ஆகவே, என்னுடைய உம்மத்தின் எந்த ஒருவரும் எந்த இடத்திலும் தொழுகைக்டகான நேரம் வந்துவிடடால் தொழுகையை நிறை வேற்றவேண்டும், எனக்காக போரில் கிடைக்கும் பொருட்கள் அனைத்தும் ஹலாலாக ஆக்கப்பட்டள்ளன, எனக்கு முன்னால் அவை யாருக்கும் ஹலா லானவையாக ஆக்கப்படவில்லை. எனக்கு ஷஃபாஅத்து எனும் பரிந்துரைக் கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நபிமார்கள் அனைவருமே தத்தம் சமூகத் தாரிடையே அனுப்பப்பட்டனர், அனால் நான் மனித குலத்தினர் அனைவருக் காகவுமே நபியாக அனுப்பப்பட்டள்ளேன். (புக்ஹாரி, முஸ்லிம்)*

*இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்:*

**أَنَا أَوَّلُ النَّاسِ يَشْفَعُ فِي الْجَنَّةِ وَأَنَا أَكْثَرُ الأَنْبِيَاءِ تَبَعاً، وَأَنَا أَوَّلُ مَنْ يَقْرَعُ بَابَ الْجَنَّةِ** (مسلم)

*பொருள்: நான் சுவர்க்கத்தின் விஷயத்தில் பரிந்துரைக்கும் முதல் மனிதனாக இருக்கிறேன், மேலும், நான் நபிமார்களிலேயே மிக அதிகமான எண்ணிக் கையில் பின்பற்றுபவர்களைக் கொண்டவனாக இருக்கிறேன், நானே சுவர்க் கத்தின் கதவை முதன் முதலில் தட்டுபவனாக (திறக்க வைப்பவனாக) இருப் பேன் (முஸ்லிம்).*

*மேலும், அவர்கள் ﷺ கூறினார்கள்:*

**أَنَا سَيِّدُ وَلَدِ آدَمَ يَوْمَ الْقِيَامَةِ، وَأَوَّلُ مَنْ يَنْشَقُّ عَنْهُ الْقَبْرُ، وَأَوَّلُ شَافِعٍ مُشَفَّعٍ**

பொருள்: நான் ஆதம் (அ) அவர்களுடைய மக்களுக்கெல்லாம் தலைவனாக இருக்கின்றேன், நான்தான் முதன் முதலாக ஃகபரிலிருந்து வெளிப்படுவேன், நானே முதன் முதலில் ஷஃபாஅத்துப் பரிந்துரை செய்வேன் என்னுடைய ஷஃபாஅத்துதான் முதலில் ஏற்றுக்கொள்ளப்படும்.

## இறைத்தூதர் அவர்களுடைய ﷺ வணக்க முறைகளும் வாழ்க்கையும்

ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

أَنَّ نَبِيَّ اللهِ صلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ ،تمَ يَقُوْمُ اللَّيْلَ حَتَّى تَتَفَطَّرَ قَدَمَاهُ، فَقَالَتْ عَائِشَةُ: لِمَ تَصْنَعُ هَذَا يَأ رَسُوْلَ اللهِ، وَقَدْ غَفَرَ اللهُ لَكَ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِكَ وَمَا تَأَخَّرَ؟ قَالَ: أَفَلاَ أُحِبُّ أَنْ أَكُوْنَ عَبْداً شَكُوْراً. (البخاري)

பொருள்: நபி ﷺ அவர்கள் இரவில் எந்த அளவிற்கு நீண்ட நேரம் தொழுகை யில் நின்றுகொண்டிருப்பார்கள் என்றால் அவர்களுடைய கால்கள் வீக்கம் கொண்டுவிடும். ஒரு முறை அவர்கள் கேட்டார்கள், இறைத்தூதர் ﷺ அவர் களே, நீங்கள் இந்த அளவிற்கு ஏன் கஷ்டப்படுகின்றீர்கள், அல்லாஹ் தஆலா உங்களுடைய முன் பின் பாவங்களையெல்லாம் மன்னித்தருளிவிட்டானே? அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள், ஆயிஷாவே, நான் நன்றியுள்ள அடியா னாக இருக்கக் கூடாதா? (புக்ஹாரி)

ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் பயன்படுத்திய படுக்கை தோலினாலானதாக இருந்தது, அதனுள் பேரீத்த மரப் பட்டைகள் நிரப்பப்பட்டிருக்கும்.

ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

مَا شَبِعَ رَسُوْلَ الله صلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ ثَلاَثَةَ أَيَّامٍ تِبَاعاً مِنْ خُبْزِ بُرٍّ، حَتَّى مَضَى لِسَبِيْلِهِ (مسلم)

பொருள்: இறைத்தூதர் ﷺ அவர்கள் எப்போதுமே மூன்று நாட்கள் தொடர்ந்து கோதுமையினாலான ரொட்டியையும் வயிறார சாப்பிட்டது கிடையாது, இந்நிலையிலேயே அவர்கள் ﷺ இவ்வுலகை விட்டும் மறைந்தவிட்டார்கள் (முஸ்லிம்)

மற்றொரு நபிமொழியில் ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

إِنْ كُنَّا آلَ مُحَمَّدٍ نَمْكُثُ شَهْراً مَا نَسْتَوْقِدُ بِنَارٍ إِنْ هُوَ إِلاَّ الْمَاءُ والتَّمْرُ (الترمذي)

*பொருள்: முஹம்மத் ﷺ அவர்களுடைய விட்டார்களான எங்கள் வீட்டிலும் கூட சில சமயங்களில் ஒரு மாதம் கடந்துவிட்டாலும் அடுப்பு எரிக்கப்படுவதில்லை, நாங்கள் தண்ணீர் ம்றறும் பேரீத்தப்பழங்களை மட்டுமே சாப்பிட்டு நாள் கடத்துவோம் (திர்மிதி)*

*ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்,*

لَقَدْ رَأَيْتُ رَسُوْلَ الله صلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ يَظَلُّ الْيَوْمَ يَلْتَوِي، مَا يَجِدُ دَقَلاً يَمْلأُ بِهِ بَطْنَهُ (مسلم)

*பொருள்: நான் இறைத்தூதர் ﷺ அவர்களை நாள் முழுவதும் பசியினால் நிம்மதியற்ற நிலையில் இருப்பதைப் பார்த்திருக்கின்றேன், அவர்களுக்கு ﷺ சில சமயங்களில் தன்னுடைய பசியை அற்றிக்கொள்ளக் கெட்டப் பேரீத்தப் பழங்களும் கிடைப்பதில்லை )முஸ்லிம்).*

*அல்லாஹ் தஆலாவுக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் தகும், அவன் நம்மை முஹம்மத் ﷺ அவர்களுடைய உம்மத்தில் படைத்தான். அல்லாஹ் தஆலா நம்மை அவர்களுக்குக் ﷺ கீழ்ப்படிந்து பின்பற்றி நடக்கும் தவ்ஃபீஃக் கொடுப்பானாக மற்றும் திருக்ஃகுர்ஆன் மற்றும் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய சுன்னத்தான முறையில் இறுதிவரை நிலைத்திருக்கச் செய்வானாக.*

## முக்கியமான நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 1 | **இஸ்ரா மற்றும் மிஃராஜ்** | *ஹிஜ்ரத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரா மற்றும் மிஃராஜுடைய நிகழ்வு நடந்தது, அப்போது தான் ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது.* |
| 2 | **ஹிஜ்ரத்தின் முதல் ஆண்டு** | *ஹிஜரத், மஸ்ஜிதுடைய கட்டமைப்பு, இஸ்லாமிய ஆட்சியின் முன்னோடி, ஜ்ஸகாத் கடமையாக்கப்படுதல்* |
| 3 | **ஹிஜ்ரத்தின் இரண்டாம் ஆண்டு** | *அல்லாஹ் தஆலா முஸ்லிம்களுக்குக் கண்ணியத்தைக் கொடுத்து இறைமறுப்பாளர்களை இழிவுக்கு ஆளாக்கிய பத்ரு போர்.* |

| | | |
|---|---|---|
| 4 | **ஹிஜ்ரத்தின் மூன்றாம் ஆண்டு** | *உஹது போர், இறைத்தூதர்ﷺ அவர்களுடைய கட்டளையின்படி சிலர் நடந்துகொள்ளாததால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பின்னடைவு* |
| 5 | **ஹிஜ்ரத்தின் நான்காம் ஆண்டு** | *பனு நஸ்ஜீர் போர், இறைத்தூதர் ﷺ அவர்கள் பனு நஸ்ஜீர் சமூகத்து யூதர்கள் உடன்படிக்கை மீறியதன் காரணமாக அவர்களை மதீனாவிலிருந்து நாடு கடத்தினார்கள்* |
| 6 | **ஹிஜ்ரத்தின் ஐந்தாம் ஆண்டு** | *பனு முஸ்தலஃக் போர், அஹ்ஜ்ஸாப் (அகழிப் போர்), பனு ஃகுரைஸ்ஜஹ் போர்* |
| 7 | **ஹிஜ்ரத்தின் ஆறாம் ஆண்டு** | *ஹுதைபிய்யஹ் உடன்படிக்கை, இவ்வாண்டில் தான் மது அருந்துவது முழுமையாக ஹராமானதாக ஆக்கப்பட்டது* |
| 8 | **ஹிஜ்ரத்தின் ஏழாம் ஆண்டு** | *க்ஹைபர் போர், இவ்வாண்டில் இறைத்தூதர்ﷺ அவர்கள் மக்காஹ்வில் பிரவேசித்தார்கள், உம்ரா நிறைவேற்றினார்கள், இவ்வாண்டில்தான் அவர்கள் ஹஜ்ரத் ஸஃபிய்யஹ் பின்த் ஹய் (ர) அவர்களுடன் திருமணம் செய்துகொண்டார்கள்* |
| 9 | **ஹிஜ்ரத்தின் எட்டாம் ஆண்டு** | *முஸ்லிம்கள், ரோமர்களுக்கிடையே முவத்தஹ் போர், மக்காஹ்வின் வெற்றி, ஹுனைன் போர்* |
| 10 | **ஹிஜ்ரத்தின் ஒன்பதாம் ஆண்டு** | *தபூக் போர் (இது இறைத்தூதர்ﷺ அவர்கள் மேற்கொண்ட கடைசி போராகும்), இவ்வாண்டு எண்ணற்ற தூதுக்குழுக்களாக பல்வேறு வம்சத்தினர் அவர்களிடம் ﷺ வருகை தந்தனர் அத்தடன் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் இணைந்தனர்* |
| 11 | **ஹிஜ்ரத்தின் பத்தாம் ஆண்டு** | *ஹஜ்ஜதுல் வதாவில்இறைத்தூதர்ﷺ அவர்கள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான நபித்தோழர்களுடன் ஹஜ் கடமையை நிறைவேற்றினார்கள்* |
| 11 | **ஹிஜ்ரத்தின்பதினோராம் ஆண்டு** | *63 ஆம் வயதில் ரபீஉல் அவ்வல் மாதத்தில் இறைத்தூதர் ﷺ அவர்கள் இவ்வுலகத்தைவிட்டு மறைந்தார்கள்* |

* * *